செய்தி வெளியீடு எண்:330 நாள் : 08.07.2016

குடும்ப அட்டையில் மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னையில் 17, மண்டல பகுதிகளில் குடும்ப அட்டைதாரர்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் பிப்ரவரி மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்ட முகாம் 09.07.2016 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி உள்ள குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டைகளில் பெயர், முகவரி மாற்றம், திருத்தம் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 17 மண்டல பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | முத்தியாலு பேட்டை ஆண்கள் மேல் நிலை பள்ளி<br>80, தம்பு செட்டி தெரு,மண்ணடி, சென்னை–600 001<br>(காளிகாம்பாள் கோவில் அருகில்) |
| 2 | இராயபுரம் | தனலட்சுமி தொடக்க பள்ளி 10, வேலாயுத பாண்டியன் தெரு<br>பழைய வண்ணாரப்பேட்டை சென்னை – 600 021. |
| 3 | பெரம்பூர் | சென்னை நடுநிலைப்பள்ளி கோகுலம், 22/26<br>செய்யூர், பார்த்தசாரதி தெரு பெரம்பூர்,<br>சென்னை – 11. (பெரம்பூர் பஸ் நிலையம் அருகில்) |
| 4 | அண்ணாநகர் | சென்னை மேல்நிலை பள்ளி எண்.16, சுப்புராயன் தெருசெனாய் நகர்<br>சென்னை–30.(மாங்காளியம்மன் கோயில் அருகில்) |
| 5 | அம்பத்தூர் | வில்லிவாக்கம் பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப் பள்ளி<br>செக்டார்4, 3வது பிளாக், நக்கீரன் சாலை , முகப்பேர் கிழக்கு,<br>சென்னை –37 (ஜே.ஜே.நகர் காவல் நிலையம் பின்புறம்) |
| 6 | வில்லிவாக்கம் | சென்னை மேல்நிலைப்பள்ளி, 65,ஸ்கூல் ரோடு<br>கொளத்தூா் சென்னை–99. (ரெட்டேரி சந்திப்பு அருகில்) |
| 7 | திருவொற்றியூர் | சென்னை நடுநிலைபள்ளி தேவராஜன் தெரு, சின்னசேக்காடு,<br>மணலி – 68 |
| 8 | ஆவடி | அரசினர் மேல்நிலை பள்ளி அரிக்கம் பேடு வெள்ளானூர்<br>சென்னை –62. (வேல்டெக் கல்லூரி அருகில்) |
| 9 | ஆர்.கே.நகர் | சென்னை உயர்நிலை பள்ளி எம்.பி.டி காலனி<br>சென்னை –81. (எம்.பி.டி காலனி மசூதி அருகில்) |
| 10 | தி.நகர் | வள்ளி திருமண மண்டபம், நெற்குன்றம் பாதை,<br>வடபழனி, சென்னை– 600 026. (வடபழனி கோயில் பின்புறம்) |
| 11 | மயிலாப்பூர் | சென்னைமேல்நிலைப்பள்ளி, எண்.1,பீலியம்மன் கோயில்தெரு,<br>தரமணி, சென்னை–600 113, (தரமணி பேருந்து நிலையம் அருகில்) |
| 12 | பரங்கிமலை | கண்டோன்மென்ட் மேல்நிலைப்பள்ளி, பட்ரோடு,<br>பரங்கிமலை (ஜெயந்தி தியேட்டர் எதிரில்) சென்னை–16. |
| 13 | தாம்பரம் | பொழிச்சலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், பொழிச்சலூர்<br>சென்னை 600 074. (பொழிச்சலூர் –2நியாய விலை அங்காடி அருகில்) |
| 14 | சைதாப்பேட்டை | சென்னை மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, மடுவங்கரை, கிண்டி,<br>சென்னை–600 032 (செக்போஸ்ட் பஸ் நிறுத்தம் அருகில்) |
| 15 | ஆயிரம்விளக்கு | சென்னை உயர்நிலைபள்ளி, எண்:1, மாடல்பள்ளிசாலை,<br>ஆயிரம்விளக்கு, சென்னை–600 006.<br>(அப்பல்லோ குழந்தைகள் நல மருத்துவமனை அருகில்) |
| 16 | சேப்பாக்கம் | சென்னை மாநகராட்சி சமுதாயக் கல்லூரிவளாகம், அருணாசலம் தெரு,<br>சென்னை–5. |
| 17 | சோழங்கநல்லூர் | குடிசை மாற்று வாரியகுடியிருப்பு பகுதி கண்ணகி நகர், 195வது வார்டு<br>மாமன்ற உறுப்பினர் அலுவலகம், ஒக்கியம் துரைப்பாக்கம், சென்னை–97<br>(கண்ணகி நகர்காவல்நிலையம் அருகில்) |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**